**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2025–ம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீ விசுவாவசு வருடம், ஆனி 30ம் நாள்**

**இ.ம.எண்.280/2025**
**இன்**
**அ.வ.எண்.90/2016**

K. பழனிச்சாமி ..மனுதாரர்/வாதி

..எதிர்..

1. கோவிந்தசாமி கவுண்டர் (இறப்பு)
2. சிவக்குமார்
3. கலாமணி
4. ராகவி
5. பூஜா
6. சரஸ்வதி ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

கடந்த 11.07.2025ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. ராஜகோபால் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. சின்னசாமி அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

கடந்த 07.03.2024ம் தேதி மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி மனுதாரரால் 1908ம் ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 9 விதி 7 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u> :–

கடந்த 04.08.2009ம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி தாவா சொத்தை மனுதாரர்/1ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரி எதிர்மனுதாரர்கள்/வாதிகள் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அசல் வழக்கு குறித்து இதுநாள் வரை எந்த ஒரு அழைப்பாணையும் மனுதாரருக்கு வரவில்லை. மேற்படி வழக்கு குறித்து மனுதாரருக்கு தற்போது தான் தெரிய வந்தது. கடந்த 25.11.2016ம் தேதியன்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் நல்ல எதிர்வாதம் உள்ளது. எனவே மனுதாரருக்கு எதிராக 07.03.2003ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :–</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைக்கத்தக்கதல்ல. அசல் வழக்கில் மனுதாரருக்கு இந்நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக்கொள்ள மனுதாரர் வேண்மென்றே மறுத்துவிட்டார். 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் 10 ஆண்டுகள் கழித்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**4.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5.** மனுதாரர் தரப்பில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ?என்பதே ஆகும்.

6. <u>தீர்வு</u> :–

**6.1** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், மனுதாரரின் கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரி விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 2009ம் ஆண்டு 3 நபர்கள் சேர்ந்து மேற்படி கிரையத்தை வழங்கியுள்ளதாகவும், கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அசல் வழக்கில் இந்நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் இடையே பிரச்சனையான போது தான் அசல் வழக்கு பற்றிய விவரம் மனுதாரருக்கு தெரிய வந்ததால் அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கில் 10 ஆண்டுகள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** அசல் வழக்கானது கடந்த 04.08.2009ம் தேதியிட்ட கிரைய ஆவணம் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்றும் விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா சொத்தின் முழு உரிமையாளர் வாதி என்று விளம்புகை பரிகாரம் கோரியும், மேலும் தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.4** அசல் வழக்கில் கடந்த 07.03.2024ம் தேதியன்று மனுதாரர்/1ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகாத காரணத்தால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 04.08.2009ம் தேதியிட்ட கிரைய பத்திரம் குறித்து அசல் வழக்கில் செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேற்படி பத்திரமானது 1 முதல் 3

பிரதிவாதிகளால் 4ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவர் எழுதி கொடுத்த கிரைய ஆவணப்படி கிரையம் பெறப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி பத்திரத்தை மனுதாரர் மற்றும் 2,3 பிரதிவாதிகள் மோசடியாக கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டு அது குறித்து விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால், மனுதாரருக்கு அவரது வழக்கை முன்னிலைப்படுத்த மீண்டும் ஒரு வாய்ப்பளித்து அசல் வழக்கில் தீர்வு காண்பது நீதியின் பால் உகந்ததாக இருக்குமென்று முடிவு செய்து, அசல் வழக்கின் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.07.14 15:35:12 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

**<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** : இல்லை

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.07.14 15:35:18 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.